පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
# பொலிஸ் ஊடகப் பிரிவு
## POLICE MEDIA DIVISION
14 ஆம் மாடி, சுகுறுபாய, பத்தரமுல்லை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දිනය<br>திகதி<br>Date | 07.05.2026<br>நேரம் 1005 | දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 011-2887973 | මගේ අංකය<br>எனது இலக்கம்<br>My No | D/Media/out/ 722 /2026 | ඊ මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | dir.media@police.gov.lk |

**தலைமை ஆசிரியர் / செய்தி ஆசிரியர்,**
**செய்தி பணிப்பாளர்/ செய்தி முகாமையாளர்**
**சகல ஊடக நிறுவனங்கள்.**

**வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் பெறப்படும் வீடுகள் மற்றும் கட்டிடங்களில் இடம்பெறும் மோசடி மற்றும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக, சொத்தின் உரிமையாளர்கள் விழிப்புணர்வுடனும் பொறுப்புடனும் செயல்பட வேண்டிய அவசியம் தொடர்பாக.**

வீடுகள், கட்டிடங்கள் மற்றும் அவற்றின் வளாகங்களை குறுகிய காலம் அல்லது நீண்டகால அடிப்படையில் வாடகை அல்லது குத்தகையாக பெறும் சில நபர்கள் அல்லது குழுக்கள், அவற்றைப் பயன்படுத்தி பல்வேறு மோசடி மற்றும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்றனர் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, வீடுகள் அல்லது கட்டிடங்களை வாடகை அல்லது குத்தகைக்கு வழங்கும் போது, சொத்தின் உரிமையாளர்கள் மிகுந்த கவனத்துடனும் பொறுப்புடனும் செயல்படுவது மிகவும் அவசியமானதாகும்.

குறுகிய காலம் அல்லது நீண்டகால அடிப்படையில் வீடுகள், கட்டிடங்கள் மற்றும் வளாகங்களை வாடகை அல்லது குத்தகையாக வழங்குவது சாதாரண நடைமுறையாகும். இவ்வாறு உள்நாட்டு அல்லது வெளிநாட்டிலுள்ள நபர்களுக்கும், சில குழுக்கள் அல்லது நிறுவனங்களுக்கு சொத்துகள் வழங்கப்படுகின்றன.

எனினும், சில சந்தர்ப்பங்களில், வீடுகள் மற்றும் கட்டிடங்களை வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் நபர்கள், சொத்தின் உரிமையாளர்கள் எவ்விதத்திலும் எதிர்பாராத வகையில், அந்த இடங்களை பயன்படுத்தி மோசடி மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளதாக

கண்டறியப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சொத்தின் உரிமையாளர்கள் பல்வேறு சிக்கலான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதுடன், குற்றச்சாட்டுகளுக்கும் உட்படுத்தப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76ஆவது பிரிவின்படி, எந்தவொரு வீட்டிலும் வசிக்கும் அனைத்து நபர்களின் தகவல்களையும் பெறுவதற்கான அதிகாரம் பொலிஸாருக்கு உண்டு. அதன்படி, குடும்பத் தலைவர் தனது குடும்ப உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் தற்காலிகமாக தங்கியிருப்போர் தொடர்பான தகவல்களை சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு வழங்க வேண்டும்.

மேலும், வசிப்போரில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அதனை உடனடியாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு அறிவிப்பது குடும்பத் தலைவர் அல்லது வீட்டு உரிமையாளரின் கடமையாகும். அவ்வாறு அறிவிக்க தவறுவது சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

அதேபோல், குறித்த வீட்டிலோ அல்லது கட்டிட வளாகத்திலோ ஏதேனும் குற்றச்செயல்கள் நடைபெறுவதை அறிந்தும் அதனை மறைத்து வைத்திருப்பது, அக் குற்றத்திற்கு உடந்தையாக இருப்பதாகவே கருதப்படும்.

ஆகவே, வீடுகள் அல்லது கட்டிடங்களை வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வழங்கும் போது, அவற்றைப் பெறும் நபர்களின் ஆள் அடையாளம், நோக்கம் மற்றும் தேவைகள் குறித்து உரிய கவனத்துடனும் விழிப்புணர்வுடனும் செயல்படுவதன் மூலம், ஏற்படக்கூடிய மோசடி மற்றும் குற்றச்செயல்களைத் தடுக்க முடியும்.

**பொலிஸ் ஊடகப் பிரிவு.**